## கேள்வி:

# "சபைக்கு முன்மாதிரி ஒன்று உள்ளதா?"

## பதில்:

*கற்றுத்தேர்ந்த பிரசங்கியார்களும், சில வயது முதிர்ந்தவர்களும் கூட இளைய தலைமுறையினரிடம், புதிய ஏற்பாட்டு நிருபங்கள் யாவும் "அன்புக் கடிதங்களின் தொகுப்பாகும், அன்புக் கடிதங்களில் சட்டங்கள் எதுவும் இருப்பதில்லை" என்று உறுதியாய்க் கூறி அவர்களைத் தவறாக வழிநடத்துகின்றனர். புதிய ஏற்பாடு முழுவதும் அன்பு வியாபித்துக் கட்டப்பட்டிருப்பினும், குறிப்பிட்ட "சட்டத்திற்கு" உட்பட்டு நடப்பவர்களுக்கு மட்டுமே அது ஆசீர்வாதங்களைக் கூறுகிறது (கிரேக்கம்: kanon; கலா. 6:16).*

*சிலர், "அன்புக் கடிதங்களில் சட்டங்கள் இருப்பதில்லை" என்று கூறுகின்றனர். ஆனால் புதிய ஏற்பாட்டின் அன்புக் கடிதங்கள் யாவும் "கிறிஸ்துவினுடைய பிரமாணத்தின்" அடிப்படையிலேயே அமைந்துள்ளன (கலா. 6:2).*

*சிலர், "நாம் அன்பு கொள்வோம், ஆனால் உபதேசம் வேண்டாம்" என்று கூறுகின்றனர். இருப்பினும், ஏவப்பட்ட மனிதர் ஒருவர், ஒரு இளம் பிரசங்கியாருக்கு "உபதேசிக்கிறதில்" "ஜாக்கிரதையாயிரு" மற்றும் "உபதேசத்தைக் குறித்து" "எச்சரிக்கையாயிரு" "இப்படிச் செய்வாயானால் உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்வாய்" என்று எழுதினார் (1 தீமோ. 4:13, 16).*

*மாதிரி என்ற கருத்தை சிலர் ஏளனம் செய்கின்றனர். இருப்பினும், தையல் தைக்கும் பெண்மணி, புதிய உடை ஒன்றைத் தயாரிப்பதில், மாதிரி ஒன்று தனக்கு உதவியாய் இருப்பதைக் காண்கிறாள். பள்ளியில் படிக்கும் ஒரு பையன் எழுத்துக்களை எழுதக் கற்றுக் கொள்ளும்போது, ஆசிரியர் அவனுக்குக் கொடுத்த மாதிரியைப் பார்த்து எழுதுகிறான். இயேசு "அவருடைய அடிச்சுவடுகளை" தொடர்ந்து வரும்படி*

*கிறிஸ்தவர்களுக்கு "மாதிரியைப்" பின் வைத்துப் போனார் (1 பேது. 2:21).*

## பழைய ஏற்பாட்டில் தேவனால் தரப்பட்ட மாதிரிகள்

*நவீனப் பிரசங்கியார்கள் கண்டனம் செய்யும் "மாதிரி இறையியல்" என்பதை, பழையநடைப் பிரசங்கியார்கள் அல்ல மாறாக தேவனே தொடங்கி வைத்தார். ஆபேலின் காலத்தி லேயே தேவன் ஆராதனையின் மாதிரியைக் கொடுத்திருந்தார். விசுவாசத்தினாலே ஆபேல் தனது பலியைச் செலுத்தினபடியி னாலும் (எபி. 11:4), விசுவாசம் கேள்வியினால் வருவதாலும் (ரோமர் 10:17), தேவன் தாவர வகைப் பலியையல்ல, மிருக பலியையே குறிப்பிட்டார் என்பது தெளிவாகிறது (ஆதி. 4:4).*

*இவ்வாறாக மிருகம் மற்றும் இரத்தத்தைக் காணிக்கை தரும் மாதிரி ஆரம்பித்தது: இம்மாதிரி, நோவா, ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோரால் தொடரப்பட்டது (ஆதி. 8:20; 12:7, 8; 26:23-25; 31:54). இஸ்ரவேலரோடு ஏற்பட்ட மோசே யின் உடன்படிக்கையில் இரத்தப் பலி அடிப்படையானதாய் இருந்தது (லேவி. 16:1-34). இந்த அமைப்பின் உச்ச நிலையானது, இயேசுவுக்கு ஒரு "சரீரம்" "ஆயத்தம் பண்ணப்பட்ட" போது வந்து சேர்ந்தது, ஏனெனில் "அவருடைய சொந்த இரத்தத்தி னாலே" அவர் "உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியானார்" (யோவா. 1:29; எபி. 9:12; 10:5).*

*நோவா பேழையைக் கட்டுவதற்குத் தேவன் குறிப்பான கட்டளைகளைக் கொடுத்தார்: மரத்தின் வகை, அளவுகள், தளங்களின் எண்ணிக்கை, ஜன்னல், இன்னும் பிற விஷயங்கள் யாவற்றையும் கொடுத்தார். நோவா மாதிரியைப் பின்பற்றிய தால் பாராட்டப்பட்டார் (ஆதி. 6:14-16, 22). மோசே, உடன்படிக்கைக் கூடாரத்தை கட்டுகையில் மலையில் தேவனால் கொடுக்கப்பட்ட (எபிரெய மொழியில் tabhnith கிரேக்க மொழியில் tupos) "மாதிரி" இல்லாமல் அப்பணியைச் செய்யவில்லை (யாத். 25:9, 40; 26:30; எபி. 8:5).*

*அதே போல், கர்த்தர், ஆலயத்தின் மாதிரியை "ஆவியி னால்" தாவீதுக்குக் கட்டளையிட்டார் (1 நாளா. 28:12). தாவீது, "இந்த மாதிரியின்படி சகல வேலைகளும் எனக்குத் தெரியப்படுத்த இவையெல்லாம் கர்த்தருடைய கரத்தினால்*

*எனக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது" என்றார் (1 நாளா. 28:19).*

*ஆலயத்தைக் கட்டுவதற்கு தாவீது அனுமதிக்கப்பட வில்லை, ஆனால் அவர், ''என்னாலே இயன்ற மட்டும்'' அதற்கென்று "சவதரித்தேன்" என்று கூறினார் (1 நாளா. 29:2). தமது மகன் சாலமோனிடம் மாதிரியை ஒப்படைக்குமுன், அவர் தரப்பட்ட அளவின்படியே "பணி தீர்ந்து கொண்டு வரப்பட்ட" கற்களைச் சேர்த்திருந்தார் (1 நாளா. 28:11; 1 இரா. 6:7). மாதிரியைப் பின்பற்றுவதில் சாலமோனின் ஜாக்கிரதை எவ்வளவாயிருந்ததென்றால், ''அது கட்டப்படுகிறபோது, சுத்திகள், வாச்சிகள் முதலான எந்த இருப்பு ஆயுதங்களின் சத்தமும் அதிலே கேட்கப்படவில்லை" (1 இரா. 6:7).*

## புதிய ஏற்பாட்டில் தேவனால் தரப்பட்ட மாதிரி

*தமது ஜனங்கள் பின்பற்றி நடப்பதற்கென்று தேவன் ஒரு மாதிரியை எப்பொழுதும் தந்துள்ளார். சாலமோனின் தேவாலயத்திற்கு அவர் (தேவன்) கட்டிடக் கலைஞராயிருந்தது போலவே, "சாலமோனிலும் பெரியவர்" (மத். 12:42) ஒருவரால் கட்டப்பட்ட வேறொரு தேவாலயத்திற்கும் தேவனே கட்டிடக் கலைஞராயிருக்கிறார். இயேசு, தாம் பொருள்களால் ஆன அமைப்பையோ அல்லது சபை கூடிவரும் கட்டிடத் தையோ கட்டப்போவதில்லை என்று அறிவித்தார் ("பொது ஆராதனைக்கென்று கட்டப்பட்ட மாளிகை''), ஆனால் மக்களால் ஆன ஒரு கட்டிடத்தை, "... நீங்கள் ... தேவனுடைய மாளிகையுமாயிருக்கிறீர்கள்" (1 கொரி. 3:9) என்று எழுதப்பட் டுள்ளதைக் கட்டப் போவதாக அறிவித்தார். இதன் விளை வாக, இயேசுவின் தேவாலயம், "விலையேறப்பட்ட கற்களா கிய" சலவைக்கல் அல்லது "கேதுரு மரங்கள்" (1 இரா. 5:17; 6:10) ஆகியவைகளால் கட்டப்படாமல், ''ஜீவனுள்ள கற்கள்'' (1 பேது. 2:5) கொண்டு கட்டப்பட்டது. "பூரண சற்குணத்தின் கட்டாகிய'' ''அன்பு'' தான் அவர்களை இணைக்கும் கலவையாக உள்ளது (கொலோ. 3:14).*

*என்ன ஒரு "கட்டிடம்"! எல்லா கிறிஸ்தவர்களும் ஒன்றா யிணைந்து, "தேவன், 'நான் அவர்களுக்குள்ளே வாசம் பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவுவேன்' என்று சொன்னபடியினால் நாங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறோம்''*

*(2 கொரி. 6:16; எபே. 2:20-22ஐக் காணவும்) என்று சொல்லக் கூடிய சிலாக்கியத்தைப் பெற்றுள்ளோம். பவுல், கிறிஸ்தவர் களுக்கு, ''தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்" என்று எழுதினார் (1 கொரி. 3:17).*

*ஆச்சரியப்படத்தக்க வகையில் கிறிஸ்தவர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து மட்டும் கர்த்தருடைய ஆலயமாயிருப் பதில்லை, ஒவ்வொருவரும் தனித்தனியே கூட அப்படித்தான் இருக்கிறோம்: ஒவ்வொரு கிறிஸ்தவருடைய சரீரமும், "பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறது" (1 கொரி. 6:19).*

*இந்த வியக்கத்தகு கட்டிடத்திற்கு மாதிரி ஒன்றுள்ளதா?* ஆபேலின் பலி, நோவாவின் பேழை, மோசேயின் உடன்படிக் கைக் கூடாரம் மற்றும் சாலமோனின் தேவாலயம் ஆகியவற் றிற்குப் பரலோகத்திலிருந்து குறிப்புரைகள் வந்தது போலவே, "சபை" என்று வழங்கப்படுகின்ற தேவனுடைய ஆவிக்குரிய இந்த ஆலயத்திற்கும் வந்தது. இந்தக் குறிப்புரைகள் பரலோகத் திலிருந்து, கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களுக்கு அனுப்பப் பட்டது. கிறிஸ்தவத்தின் "தொடக்கம்" பற்றி முன்னுரைக்கை *யில் (கி.பி. 30, அப். 2:1-47; 11:15), சபைக்கான பிதாவின் மாதிரியை இயேசு பன்னிருவருக்கும் அறிவித்தார்: "பூலோ கத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும் (கிரேக்கம்: estai dedemena); பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப் பீர்களோ, அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப் பட்டிருக்கும்" (கிரேக்கம்: estai lelumena) (மத். 18:18).*

*அப்போஸ்தலர்கள் எதையும் கூறுவதற்கு அல்லது எழுது வதற்கு முன்னதாகவே அவர்கள் கூறப்போகிற அல்லது எழுதப் போகிறவைகள், அப்போஸ்தலர்களுக்கு எருசலேமில், பெந்தெ கொஸ்தே நாளில் அனுப்பப்படவிருந்த பரிசுத்த ஆவியான வரிடத்தில் பிதாவினால் கூறப்பட்டன (யோவா. 14:26; அப். 1:8; 2:1-4). ஆவியானவர் "சுயமாய்" ஒன்றும் பேசுவதில்லை; ஆனால் பிதாவானவர் தம்மிடத்தில் கூறக் கேட்டவைகளை, "சகல சத்தியத்திற்குள்ளும்" அப்போஸ்தலர்களை வழி நடத்து வதற்காக அவர் "அறிவிப்பார்" (யோவா. 16:13).*

*"மறு ஜென்ம காலம்" முழுவதும் "பன்னிரெண்டு சிங்கா சனங்களின்மேல்" அமர்ந்திருக்கும் "தூதர்களாக" அப்போஸ் தலர்கள் இருக்க வேண்டியிருந்தது (மத். 19:28). அவர்கள் "உலகத்தின் முடிவு பரியந்தம்" "வானத்திலிருந்து" "அதிகாரம்*

*பெற்றவர்களாய்'' இருக்க வேண்டியுள்ளது (மத். 18:18; 28:20; 2 கொரி. 5:20; 1 தெச. 2:6ஐக் காணவும்). கி.பி. 30, பெந்தெகொஸ்தே நாள்முதல், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையிலும் ''சத்திய ஆவியையும், வஞ்சகத்தின் ஆவியையும்" (1 யோவா. 4:6) வரையறுத்துப் பார்ப்பதற்குரிய ஒரே வழி, "அப்போஸ்தலரின் உபதேசத்திற்குத்" திரும்புவது மட்டுமேயாகும் (அப். 2:42). புதிய ஏற்பாட்டின் இருபத்தி யேழு புத்தகங்கள் மட்டுமே இந்தப் பூமியில் இன்று அப்போஸ்தலர்களின் உபதேசங்கள் கிடைக்குமிடமாகும். பிதாவானவரின் சித்தம் மற்றும் ஞானத்தினால், புதிய ஏற்பாடு நிறைவானதாய், மாற்றப்பட முடியாததாய், இறுதியானதாய் உள்ளது (2 தீமோ. 3:17; 2 பேது. 1:3; கலா. 1:8, 9; யூதா 3).*

## தேவன் தந்த மாதிரிகள் மறுக்கப்படுதல்

*முதல் நூற்றாண்டு சபையை மறுகட்டுமானம் செய்வ தற்குப் புதிய ஏற்பாட்டைப் பின்பற்ற வேண்டும் என்ற கருத்தைச் சிலர் இகழுகின்றனர். அவர்கள், "எந்த சபையை நீங்கள் மறுகட்டுமானம் செய்ய விரும்புகிறீர்கள்? சுவிசேஷ அறிவிப்பில் வைராக்கியம் குறைவுபட்ட எருசலேம் சபை யையா? அல்லது வெளிப்படையான வேசித்தனமும், சபை ஆராதனையில் கர்த்தருடைய பந்தியின் நேரத்தில் மதுபான மயக்கமும் நிறைந்திருந்த கொரிந்து சபையை மறுகட்டுமானம் செய்யப் போகிறீர்களா?" என்று கேட்கின்றனர்.*

*முதல் நூற்றாண்டு சபையில் தேவன் எவைகளை அங்கீ கரித்தார் மற்றும் எவைகளை அவர் அங்கீகரிக்கவில்லை என்பதைப் புதிய ஏற்பாடு தெளிவாக்குகிறது. அது, நல்ல மற்றும் கெட்ட எடுத்துக்காட்டுகளை நமக்கு கூறுகிறது, மற்றும் பொதுமக்கள் ''நன்மை தீமையின்னதென்று பகுத்தறிய'' (எபி. 5:14)க் கூடிய வகையிலேயே அது எழுதப்பட்டுள்ளது.*

*மக்கள் யாவரும் மாதிரியைப் பின்பற்றுகிறவர்களாயிருக்க வேண்டும் என்று ஆதிமுதலே தேவன் திட்டமிட்டிருந்தாலும், காயீனில் தொடங்கி (ஆதி. 4:5-7) ஆதி முதலாகவே, மாதிரியை மறுப்பவர்களும் தோன்றியுள்ளனர். மனிதனுடைய மேட்டி மையானது, மறுபடியும் மறுபடியும் அவனை பரலோகத்தின் நடத்துதல்களை மறுதலிக்கவும், ''தன் பார்வைக்குச் சரி போனபடி" (நியா. 21:25) செய்யவும் அவனை வழி நடத்திச்*

*சென்றது. எரேமியா, ''மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்ல'' என்று பிரசங்கித்தார். அதாவது தன் நடைகளை நடத்துகிறது அழியக்கூடியவனால் முடியாதது (எரேமியா 10:23) என்றார். "மனிதனே எல்லாவற்றிற்கும் அளவீடாயிருக்கிறான்"[1] என்று அவனுடைய முரட்டுக்குணம் வாதிடுகின்றது.*

*"உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள்'' (ரோமர் 12:16) என்ற அப்போஸ்தல எச்சரிப்பானது பொதுவாக உதாசினப்படுத்தப்படுகிறது. மனிதனுடைய சுய ஞானமானது, மானிடவியலாளர்களை, ''ஆத்திகத்திற்கான காலம் கடந்து விட்டது''[2]; "எந்த தெய்வமும் நம்மை இரட்சிக் காது; நம்மை நாமே இரட்சித்துக் கொள்ள வேண்டும்''[3] என்றெல்லாம் எழுதும்படி வழி நடத்துகின்றது.*

*தேவன் இருக்கின்றார் என்று நம்பும் சிலர் கூட கிறிஸ்துவை மறுதலிக்கின்றனர். "இயேசுவின் மூலம் மட்டுமே இரட்சிப்பு சாத்தியம்'' என்ற கூற்றை "சுயநீதியுள்ளது'' என்று அவர்கள் உறுதியாய் கூறுகின்றனர்.*

*மற்ற சிலர், தேவன் இருக்கின்றார் என்றும், இரட்சிப்பு கிறிஸ்துவின் மூலம் மட்டுமே உண்டு என்றும் கூறிக் கொண்ட போதிலும், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும் மாதிரியைத் துறந்து விடுகின்றனர் (2 தெச. 1:7-9).[4] நிரூபணமற்ற கூற்றை உறுதியாகப் பற்றும் ஒரு சுவிசேஷப் பிரசங்கியார், "முழுக்குதல் பெறாத நேர்மையானவர்கள் நித்தியத்திற்கும் இரட்சிக்கப்படுவார்கள் என்று நம்புகின்றேன்'' என்று எழுதியிருக்கிறார்.*

*வேறு சிலர், எல்லா மாதிரிகளையும் மறுத்து, ஒருவரும் இழந்து போகப்பட மாட்டார்கள் என்ற கருத்தைப்பற்றி யுள்ளனர். அவர்கள் தேவன் மிக நல்லவரென்றும், அன்புள்ள வரென்றும், ஒருவரையும் அவர் நரகத்திற்கு அனுப்பமாட்டா ரென்றும் ஒரு கருத்தை தங்கள் ஆத்துமாவில் நிலையாக வைத்துள்ளனர்.*

*"அப்படியானால், மனுஷனே, தேவனோடு எதிர்த்துத் தர்க்கிக்கிற நீ யார்?'' (ரோமர் 9:20அ).*

## *முடிவுரை*

*இன்றைய நாட்களில், தேவன் நமக்கு ஒரு மாதிரியை அளித்துள்ளார். ஒரு ஆசிரியரின் வழிநடத்துதல்களைப் பொருட்படுத்தாமல், பொருளற்ற விதத்தில் கிறுக்கிக்*

கொண்டிருக்கும் பிள்ளையைப் போல் நாம் இருக்க வேண்டாம். மாறாக, தேவன் விரும்புகின்றபடியான மாதிரியைப் பின்பற்றுகிறவர்களாய் நாம் இருக்கக் கடவோம். ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்பதே அவர் விருப்பமாயுள்ளது (2 பேது. 3:9).

**குறிப்புகள்**

[1]கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க தத்துவ ஞானி புரோட்ட கோரஸ் என்பவரால் இவ்வாறு கூறப்பட்டது. [2]"மானிடவியல் கொள்கை விளக்கம் I", புதிய மானிடவியலாளர் (மே/ஜூன் 1933); மறுபதிப்பு - பால் கர்ட்ஸ், ed ., மானிடவியல் கொள்கை விளக்கம் I மற்றும் II (பஃபல்லோ, N.Y.: புரோமித்யூஸ் நூல்கள், 1973), 8. [3]"மானிடவியல் கொள்கை விளக்கம் II", மானிடவியலாளர் (செப்டம்பர்/அக்டோபர் 1973); பால்கர்ட்ஸின் மறுபதிப்பு, ed ., மானிடவியல் கொள்கை விளக்கம் I மற்றும் II (பஃபல்லோ, N.Y. : புரோமித்யூஸ் நூல்கள், 1973), 16. [4]ரோமர் 6:17ல் உள்ள "உபதேச சட்டம்" என்ற விளக்கத்துடன் 6:3, 4ஐப் படிக்கவும்.